PADMAADEVI SUGARS LIMITED

(IN LIQUIDATION) (CIN: U15421TN1995PLC029913)
Registered Office as per MCA Records: 106, Palayasivaram Village,
Kancheepuram – 631606, Tamil Nadu

Sale Notice under Insolvency and Bankruptcy Code, 2016

Invitation for submitting Bid Application Form in respect of sale of assets of Padmaadevi Sugars Limited, (in Liquidation) ("Corporate Debtor") under Regulation 32 of IBBI (Liquidation Process) Regulations, 2016 on **"AS IS WHERE IS BASIS", "AS IS WHAT IS BASIS", "WHATEVER THERE IS BASIS" and "NO RECOURSE BASIS"** by the Liquidator appointed by the Hon'ble NCLT, Chennai Bench, vide order dated 11th June 2024.

It is proposed to conduct the e-Auction in the following manner:

- **Lot-1: "Sale as Going Concern"**, will be conducted as per Regulation 32(e) and 32A of the IBBI (Liquidation Process) Regulations, 2016.

If e-Auction under Lot 1 fails

- **Lot-2: "Sale of Assets in Parcels"**, will be conducted as per Regulation 32(d) of the IBBI (Liquidation Process) Regulations, 2016.

Last date for submission of Bid Application form	30th October 2024, Wednesday
Site visit to be completed on or before	16th November 2024, Saturday
Last date for submission of EMD	18th November 2024, Monday

Date of e-Auction	**20th November 2024, Wednesday**
Time of e-Auction	For Lot-1: 11:00 am to 12:00 noon
	If e-Auction under Lot 1 fails
	For Lot-2: 02:00 pm to 03:00 pm

<table>
<tr><th>Lot</th><th>Particulars</th><th>Reserve Price (INR)</th><th>EMD (INR)</th><th>Incremental Bid Amount (INR)</th></tr>
<tr><td>Lot-1</td><td>Sale of the Corporate Debtor "as a going concern"</td><td>165,00,00,000</td><td>16,50,00,000</td><td>30,00,000</td></tr>
<tr><td>Lot-2</td><td>Sale of assets of the Corporate Debtor in parcel:</td><td>Reserve Price (INR)</td><td>EMD (INR)</td><td>Incremental Bid Amount (INR)</td></tr>
<tr><td colspan="2">a. Land and Buildings – Factory land and building situated at Chengalpattu – Kancheepuram Road. No. 106, Palayasivaram Village, Walajabad Taluk, Kancheepuram – 631606 admeasuring total land extent of 88.83 acres</td><td>117,00,00,000</td><td>11,70,00,000</td><td>20,00,000</td></tr>
<tr><td colspan="2">b. Plant and Machineries –
<table>
<tr><th>#</th><th>Unit</th><th>Capacity</th></tr>
<tr><td>1</td><td>Sugar Mill A</td><td>2500 tons per day</td></tr>
<tr><td>2</td><td>Sugar Mill B</td><td>6500 tons per day</td></tr>
<tr><td>3</td><td>Cogeneration Power Plant</td><td>15 MW</td></tr>
<tr><td>4</td><td>Cogeneration Power Plant</td><td>27.3 MW</td></tr>
<tr><td>5</td><td>Distillery Unit</td><td>100 KLPD</td></tr>
</table>
(More details provided in Process Memorandum)</td><td>48,00,00,000</td><td>4,80,00,000</td><td>10,00,000</td></tr>
</table>

Notes:

1. Interested bidders are advised to refer Process Memorandum containing information about the assets and encumbrances along with detailed terms and conditions of the online e-Auction process, eligibility criteria, etc., uploaded on the website through which the e-Auction will be conducted i.e., https://nesl.co.in//auction-notices-under-ibc/. They can also send an email to the Liquidator for a copy of the Process Memorandum.
2. Liquidator has the right to accept or cancel or extend or modify any terms and conditions of e-Auction at any time. Liquidator has the right to reject any of the bids without giving any reason.
3. On the close of e-Auction, the successful bidder shall be required to make payment of 25% of the bid amount (EMD paid can be adjusted towards this payment) within 3 days of issuance of Letter of Intent; and the balance 75% of the bid amount along with applicable taxes and duties on the entire bid amount within 30 days of approval of NCLT, but not later than 90 days; provided that the payments made after 30 days of approval of NCLT, shall attract interest at the rate of 12% per annum.
4. GST & other applicable taxes shall be levied and payable extra in addition to the bid amount.
5. For further clarifications, please contact the undersigned.

S. Rajendran – Liquidator
IBBI Regn No. IBBI/IPA-002/IP-N00098/2017-18/10241
Authorisation for Assignment valid upto 22nd November 2024
E-mail ID: liq.padmaadevisugars@gmail.com
Contact No: +919840906523, Mr. Raghu K

Date: 16th October 2024
Place: Chennai

பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட்

(கலைப்புக்குட்பட்ட) (CIN: U15421TN1995PLC029913)
MCA பதிவின்படி பதிவு அலுவலகம் : 106, பழையசீவரம் கிராமம்,
காஞ்சிபுரம் - 631606, தமிழ்நாடு

திவால்நிலை மற்றும் வங்கிதிவால்நிலை விதி, 2016-ன்கீழ் விற்பனை அறிவிப்பு

மாண்புமிகு NCLT, சென்னை பெஞ்ச், 11.06.2024 தேதியிட்ட உத்தரவின்படி நியமிக்கப்பட்ட கலைப்பலுவலரால் IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு மற்றும் எந்தநிலையில் உள்ளதோ அதேநிலையில்"** எனும் அடிப்படையில் பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட் (கலைப்புக்குட்பட்ட) ("கார்ப்பரேட் கடனாளி") சொத்துக்களை விற்பது தொடர்பான ஏல விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு.

மின் ஏலத்தை பின்வரும் முறையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- **லாட்-1 :** "IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள் 2016-ன் விதிமுறை 32(e) மற்றும் 32A-ன்படி **"நடந்துகொண்டிருக்கும் நிறுவனம் விற்பனை"**.

லாட் 1-ன்கீழ் மின்-ஏலம் தோல்வியடைந்தால்

- **லாட்-2 :** "IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள் 2016-ன் விதிமுறை 32(d)-ன்படி **"பகுதியாக சொத்துக்களை விற்பனை செய்வது"**.

ஏலம் விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள்	30.10.2024, புதன்கிழமை
சைட் பார்வையிடும் கடைசி நாள்	16.11.2024, சனிக்கிழமை
EMD சமர்ப்பிக்கும் கடைசி நாள்	18.11.2024, திங்கட்கிழமை

மின்-ஏலம் நாள்	**20.11.2024, புதன்கிழமை**
மின்-ஏலம் நேரம்	லாட் - 1 : 11:00 am to 12:00 noon
	லாட் 1-ன்கீழ் மின்-ஏலம் தோல்வியடைந்தால்
	லாட் - 2 : 02:00 pm to 03:00 pm

லாட்	**விவரம்**	**ரிசர்வ் தொகை (ரூபாய்)**	**EMD (ரூபாய்)**	**ஏலம் உயர்வு தொகை (ரூபாய்)**
லாட்-1	கார்ப்பரேட் கடனாளி விற்பனை **"நடந்துகொண்டிருக்கும் நிறுவனம்"**	165,00,00,000	16,50,00,000	30,00,000

<table>
<tr><th>லாட்-2</th><th>கார்ப்பரேட் கடனாளியின் சொத்துக்கள் பகுதியாக விற்பனை:</th><th>ரிசர்வ் தொகை (ரூபாய்)</th><th>EMD (ரூபாய்)</th><th>ஏலம் உயர்வு தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td colspan="2">a. நிலம் மற்றும் கட்டிடங்கள் - செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலை, எண். 106, பழையசீவரம் கிராமம், வாலாஜாபாத் தாலுகா, காஞ்சிபுரம்-631606-ல் அமைந்த தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம் பரப்பளவு மொத்த நிலம் 88.83 ஏக்கர்ஸ்</td><td>117,00,00,000</td><td>11,70,00,000</td><td>20,00,000</td></tr>
<tr><td colspan="2">b. ஆலை மற்றும் இயந்திரங்கள் -
<table>
<tr><th>#</th><th>யூனிட்</th><th>திறன்</th></tr>
<tr><td>1</td><td>சுகர் மில் A</td><td>2500 tons per day</td></tr>
<tr><td>2</td><td>சுகர் மில் B</td><td>6500 tons per day</td></tr>
<tr><td>3</td><td>இணை மின் உற்பத்தி நிலையம்</td><td>15 MW</td></tr>
<tr><td>4</td><td>இணை மின் உற்பத்தி நிலையம்</td><td>27.3 MW</td></tr>
<tr><td>5</td><td>டிஸ்டில்லரி யூனிட்</td><td>100 KLPD</td></tr>
</table>
(செயல்முறை குறிப்பில் கூடுதல் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன)</td><td>48,00,00,000</td><td>4,80,00,000</td><td>10,00,000</td></tr>
</table>

குறிப்புகள்:

1. ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஆன்லைன் மின்-ஏலம் செயல்முறையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சொத்துக்கள் மற்றும் சுமைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட செயல்முறை குறிப்பாணையை மின்-ஏலம் நடத்தப்படும் இணையத்தில் பதிவேற்றப்பட்ட அதாவது https://nesl.co.in//auction-notices-under-ibc/ பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். செயல்முறை குறிப்பாணை நகல் பெறுவதற்கு கலைப்பலுவலருக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
2. எந்த நேரத்திலும் மின்-ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்க அல்லது ரத்து செய்ய அல்லது நீட்டிக்க அல்லது மாற்றியமைக்க கலைப்பாளருக்கு உரிமை உள்ளது. எந்த ஒரு ஏலத்தையும் காரணம் கூறாமல் நிராகரிக்க கலைப்பலுவலருக்கு உரிமை உண்டு.
3. மின்-ஏலத்தின் முடிவில், வெற்றிப்பெற்ற ஏலதாரர் ஏலத் தொகையில் 25% (EMD செலுத்தப்பட்ட தொகையை இந்த கட்டணத்தில் சரிசெய்யலாம்) உத்தேச ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்ட 3 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் மற்றும் மீதமுள்ள ஏலத் தொகையின் 75% மற்றும் முழு ஏலத் தொகையின் மீது பொருந்தக்கூடிய வரிகள் ஆகியவை NCLT ஒப்புதல் அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் ஆனால் 90 நாட்கள் மிகாமல், செலுத்த வேண்டும், NCLT ஒப்புதல் அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிறகு செய்யப்படும் தொகை மீது ஆண்டுக்கு 12% வட்டி வசூலிக்கப்படும்.
4. GST மற்றும் பிற பொருந்தக்கூடிய வரிகள் விதிக்கப்படும் மற்றும் ஏலத்தொகைக்கு கூடுதலாக செலுத்த வேண்டும்.
5. மேலும் விளக்கங்களுக்கு, கீழே கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளவும்.

S. ராஜேந்திரன் - கலைப்பலுவலர்
IBBI பதிவு எண். IBBI/IPA-002/IP-N00098/2017-18/10241
ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் செல்லுப்படியாகும் காலம் 22.11.2024
மின்னஞ்சல்: liq.padmaadevisugars@gmail.com
தொடர்பு எண். +919840906523, திரு. ரகு K

நாள் : 16.10.2024
இடம் : சென்னை

சாம்சங் தொழிலாளர்கள் போராட்டம் நிறைவுபெற்றதாக அரசு அறிவிப்பு

● பேரவை கூட்டத்துக்கு பின் முடிவு எட்டப்படும் என சிஐடியு தகவல்

● சென்னை

அமைச்சர்கள் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து சாம்சங் தொழிலாளர்கள் போராட்டம் முடிவுக்கு வந்ததாக அரசு அறிவித்துள்ளது.

அதே நேரம், பேரவை கூட்டத்துக்குப் பின் நல்ல முடிவு எட்டப்படும் என சிஐடியு மாநில தலைவர் சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் செயல்பட்டு வரும் சாம்சங் நிறுவனத்தில் சாம்சங் இந்தியா தொழிலாளர் சங்கத்தை பதிவு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த செப்.9-ம் தேதி முதல் ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், அமைச்சர்கள் குழுவினர் தொடர் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் பயனாக சாம்சங் நிர்வாகம், தொழிலாளர்களின் நலனைக் கருதி பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்தது.

இதைத்தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன்பின், நேற்று அமைச்சர் எ.வ.வேலு அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் முன்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. நிர்வாகத் தரப்பு மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தப் பேச்சுவார்த்தையில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதுகுறித்து அரசு தரப்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தொழில் அமைதி மற்றும் பொது அமைதி காக்கும் பொருட்டு தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தை உடனடியாக கைவிட்டு பணிக்கு செல்ல வேண்டும். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள், மீண்டும் பணிக்கு திரும்பும்போது நிர்வாகம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காரணத்துக்காக மட்டும் எவ்வித பழிவாங்கும் நடவடிக்கையும் எடுக்கக் கூடாது.

வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்பும் தொழிலாளர்கள் நிர்வாகத்தினருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும் நிர்வாகத்துக்கு எதிராக எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது. தொழிலாளர்கள் முன்வைத்த ஊதிய உயர்வு மற்றும் பொது கோரிக்கையின்மீது நிர்வாகம் எழுத்துப்பூர்வமாக பதிலுரையை சமரச அலுவலர் முன்பு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த அறிவுரைகளை இரு தரப்பிலும் ஏற்றுக் கொண்டு, வேலை நிறுத்தத்தை கைவிட்டு, தொழிலாளர்கள் உடனடியாக பணிக்கு திரும்புவதாக தெரிவித்தனர்.

இதனால், சாம்சங் தொழிற்சாலையில் நடைபெற்று வந்த வேலை நிறுத்த போராட்டம் முடிவுக்கு வந்தது. தொழிலாளர்கள் அனைவரும் பணிக்கு திரும்ப உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற சிஐடியு மாநில தலைவர் சவுந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறும்போது, “தொழிற்சங்க பதிவைப் பொறுத்தவரை நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்பட தயார் என ஏற்கெனவே சொல்லிவிட்டோம். தற்போதைய பேச்சுவார்த்தையில் பிரச்சினை, முறிவு, குழப்பம் என எதுவும் இல்லை. பேச்சுவார்த்தை தொடக்கத்தில் இருந்து சுமுகமாக, நல்லபடியாக நடைபெற்றது. எங்களது பேரவை கூட்டம் அக்.16-ம் தேதி (இன்று) நடைபெறுகிறது. அதன் பிறகு நல்ல முடிவு எட்டப்படும்.

கூட்டத்தில் பணிக்கு திரும்புவது என முடிவு எடுத்துவிட்டால், அடுத்த நாளே அனைவரும் பணிக்கு திரும்பி விடுவார்கள். அரசின் முயற்சிக்கு பாராட்டுகள்'' என்றார்.

அரசு மருத்துவமனையில் ஆய்வு

● குரோம்பேட்டை

தாம்பரம் அரசு மருத்துவமனையில் மழைக் காலங்களில் மழைநீர் கீழ்த்தளத்துக்கு வருவதற்கு முன்னர், அங்குள்ள நோயாளிகளை மேல்தளத்துக்கு மாற்றுமாறு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் மருத்துவமனையில் உள்ள கர்ப்பிணிகளை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுமாறு மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கி, ஆக்சிஜன் இருப்பு, தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதேபோல் தாம்பரம் ஜெய் கோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளியிலிருந்து தாம்பரம் மாநகராட்சியின் 5 மண்டலங்களுக்கும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படுபவர்களுக்கு அத்தியாவசிய தேவையான உணவு பொருட்கள், தண்ணீர் ஒவ்வொரு மண்டலத்துக்கும் பிரித்து அனுப்பப்பட்டு வரும் பணிகளை ஆட்சியர் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர், நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் ஷேக் அப்துல் ரகுமான், மாநகராட்சி துணை ஆணையர் நாராயணன், தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் சிராஜ் பாபு உடனிருந்தனர்.

சென்னை குடிநீர் ஏரிகளுக்கு மழை நீர் வரத்து அதிகரிப்பு

● திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர் மழையால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து சென்னை குடிநீர் ஏரிகளுக்கு மழைநீர் வரத்து அதிகரித்துள்ளது. இதில், புழல் ஏரிக்கு விநாடிக்கு 4,278 கன அடி மழைநீர் வந்து கொண்டிருக்கிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் தொடர் மழை பெய்து வருகிறது. இம்மழை, லேசான, மிதமான, கன மழை பெய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டப் பகுதிகளில் லேசான மழை பெய்து வருகிறது. இதனால், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சென்னை குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முக்கிய ஏரிகளுக்கு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து மழை நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதில், நேற்று மாலை 4 மணி நிலவரப்படி, விநாடிக்கு புழல் ஏரிக்கு 4,278 கன அடி, சோழவரம் ஏரிக்கு 1,553 கன அடி, செம்பரம்பாக்கம் ஏரிக்கு 1,165 கன அடி, பூண்டி ஏரிக்கு 270 கன அடி, கண்ணன்கோட்டை-தேர்வாய் கண்டிகை ஏரிக்கு 60 கன அடி என, மழைநீர் வந்து கொண்டிருக்கிறது.

3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியின் நீர் இருப்பு 2,194 மில்லியன் கன அடியாகவும், 1,081 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரியின் நீர் இருப்பு 130 மில்லியன் கன அடியாகவும், 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு 1,249 மில்லியன் கன அடியாகவும் இருக்கிறது.

அதே போல், 3,231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியின் நீர் இருப்பு, 341 மில்லியன் கன அடியாகவும், 500 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட கண்ணன் கோட்டை-தேர்வாய் கண்டிகையின் நீர் இருப்பு 302 மில்லியன் கன அடியாகவும் உள்ளது என, நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக

தாம்பரத்தில் அதிகாரிகளுடன் அமைச்சர்கள் ஆய்வு

● தாம்பரம்/காஞ்சி/ஆவடி

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாம்பரம் மாநகராட்சி பகுதியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் அதிகாரிகளுடன் நேற்று நேரில் ஆய்வு செய்தனர். தொடர்ந்து இதில் ஈசா பல்லாவரம் பகுதியில் உள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிவாரண முகாம், இரும்புலியூர் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகள், தாம்பரம் - கிஷ்கிந்தா சாலையில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தனர்.

↑ **தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், கிஷ்கிந்தா சாலை, பாப்பன் கால்வாய் பகுதியில் நடைபெறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் குறித்து அமைச்சர்கள் கே.என்.நேரு, அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று ஆய்வு செய்தனர். உடன் ஆட்சியர் அருண்ராஜ், எம்எல்ஏக்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், அதிகாரிகள் உள்ளிட்டோர்.** படம்: எம்.முத்துகணேஷ்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது: மழையால் பாதிக்கப்படும் பொதுமக்கள் தங்க வைப்பதற்கு இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்களான பிரட், பால் போன்ற அனைத்து பொருட்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேவையான அளவு உணவுகள் சமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் யார் தகவல் தெரிவித்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மோசமான பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் பொதுமக்களை மீட்டு முகாமில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையானதை செய்து கொடுக்க அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

தண்ணீர் அதிகரித்தால் பொதுமக்களை மீட்டு செல்ல படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தாம்பரம் மட்டுமல்லாமல் குன்றத்தூர், பூந்தமல்லி, மாங்காடு, ஆவடி போன்ற அனைத்து பகுதிகளிலும் ஆய்வு மேற்கொள்கிறோம். என்னென்ன தேவையோ அவற்றை உடனடியாக செய்து கொடுக்க வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதனை செய்து வருகிறோம்.

கடந்த மழையின் போது ஏற்பட்ட பாதிப்புகளை தவிர்க்க ரூ.1 கோடி மதிப்பீட்டில் நீர்வளத் துறை, நகராட்சி, ஊரக வளர்ச்சி துறை சார்பில் வாய்க்கால் கட்டுப்படுகிறது. சாலை அமைப்பதற்கு ஒருபுறம் பொதுப் பணித் துறை, ஒருபுறம் நெடுஞ்சாலை துறைக்கு என பணம் கொடுக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

தாம்பரம் மாநகராட்சி சார்பில் அனைத்து பகுதிகளிலும் தூர்வாரப்பட்டு தண்ணீர் உடனடியாக வடிவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். நிரந்தரமாக செய்ய வேண்டிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

குட்வில் நகர் பகுதியில் பொதுப்பணித் துறை சார்பில் பணிகள் நடைபெற உள்ளன, விரைவில் அந்த பணிகள் நடைபெறும். அனகாபுத்தூர் பகுதியில் குண்டும் குழியுமாக உள்ள சாலையை சீரமைத்து சாலை அமைப்பதற்கு பணம் கொடுக்கப்பட்டுள்ளது. மழை நின்றவுடன் உடனடியாக சாலைகள் சரி செய்யப்படும் என்றார்.

இந்த ஆய்வுகளின் போது எம்எல்ஏக்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, நகராட்சி நிர்வாக துறை இயக்குநர் சிவராசு, செங்கல்பட்டு ஆட்சியர் ச.அருண்ராஜ், மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர் உட்பட பலர் உடன் இருந்தனர்.

குன்றத்தூர் மணிகண்டன் நகரில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ. அன்பரசன் ஆகியோர் ஆய்வு செய்தனர். இவர்களுடன் ஆட்சியர் கலைச்செல்வி உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

ஆவடி மாநகராட்சி, பூந்தமல்லி மற்றும் திருவேற்காடு பகுதிகளில் நடைபெறும் பணிகளை நேற்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காஞ்சி, செங்கையில் 48 ஏரிகள் நிரம்பின

● காஞ்சி / மதுராந்தகம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 25 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. இந்நிலையில் ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கலைச்செல்வி முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இந்தக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.சண்முகம், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். செங்கை மாவட்டத்தில் 23 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன.

அரசியல், சமூக அமைப்புகள் செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி:
press.release@hindutamil.co.in

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

TNRDC
TAMILNADU ROAD DEVELOPMENT COMPANY LTD.
TENDER NOTICE (Online only)
Tender Notice No: TNRDC/CD/009/2024 Date: 09.10.2024
The Managing Director, M/s. TamilNadu Road Development Company Ltd.(TNRDC), R.A Puram, Chennai- 600 028 invites bids under two cover system through online only for implementation of the following works in East Coast Road (ECR), Tamil Nadu upto 04.11.2024, 3.00 PM.

S. No.	Description of Works	Indicative value of work inclusive of GST(Rs)	EMD / Bid Security value (Rs)	Bid Document Cost inclusive of GST (Rs)	Period of completion
1	Resurfacing of East Coast Road from Kanathur to Nemmeli- Package-I – LHS - 2.00 km (Ch:27+100 to 27+800, 35+100 to 35+800,38+400 to 39+000) RHS - 4.45 km (Ch:34+000 to 34+850, 36+000 to 37+000, 39+200 to 41+800)	401.38 Lakhs	4,01,400/-	17,700/-	04 months
2	Resurfacing of East Coast Road from Nemmeli to Pattipulam – Package – II LHS - 1.00 Km (Ch:45+000 to 46+000) RHS - 5.00 km (Ch:41+800 to 46+800)	387.25 Lakhs	3,87,300/-	17,700/-	04 months
3	Resurfacing of East Coast Road from Pattipulam to Devaneri - Package – III LHS - 2.40 km (Ch:48+800 to 50+600, 51+000 to 51+600) RHS - 3.85 km (Ch:46+800 to 48+450, 48+800 to 51+000)	389.88 Lakhs	3,90,000/-	17,700/-	04 months

Details of works, availability of tender documents and all other details are available from 17.10.2024 to 04.11.2024, 3.00 PM in the NIC portal website https://tntenders.gov.in. In case of any changes / corrections etc on the above, the same will be published in the above website only. The bids are scheduled to be opened on 05.11.2024 at 03.30 PM

Managing Director
TamilNadu Road Development Company Ltd.
DIPR/4265/Tender/2024

கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிளை
B-32, டான்ஸ்டியா எப்என்எப்
சேவை மையம், எண்.பி22, கிண்டி
தொழிற்பேட்டை, சென்னை 600 032.
தொலைபேசி எண்: 9444074054, 9498346053
केनरा बैंक Canara Bank

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சட்டம்), பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

பெறுநர்,
01. **திருமதி. ஷகிலா பானு** (கடன்தாரர்)
02. **திரு.ஏ.ரஹ்மதுல்லா** (உடன் கடன்தாரர்)
இருவரது வசிப்பிடம்
எண்.20 12, முதல் தெரு, சாதிக்பாஷா நகர், ஆழ்வார்திருநகர், சென்னை 600 087.

பொருள் : கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் (இனி "சட்டம்" என குறிப்பிடப்படும்) கீழ், **கனரா வங்கி, கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் கிளையின் கீழ்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,** இனி "ஈடுபெற்ற கடன் வழங்கியவர்" என்று குறிப்பிடப்படுபவர், இந்த அறிவிப்பின் மூலம் உங்களுக்கு கீழ்கண்டவாறு தெரிவிப்பதாவது:

திருமதி. ஷகிலா பானு மற்றும் திரு. ஏ. ரஹ்மதுல்லா, இனிமேல் "கடன்தாரர்" என்று குறிப்பிடப்படும், இங்கே அட்டவணை Aல் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வசதி / வசதிகளைப் பெற்று, ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு ஆதரவாக பாதுகாப்பு ஒப்பந்தம்/களில் கையெழுத்திட்டுள்ளார். மேற்கூறிய நிதி உதவியைப் பெறும்போது, மேலே குறிப்பிட்ட ஒப்பந்தங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் தொகை (களை) திருப்பிச் செலுத்த நீங்கள் வெளிப்படையாக உறுதியளித்துள்ளீர்கள். இங்கே அட்டவணை Bல் விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களுக்கு எதிரான ஒப்பந்தங்களிலும் நீங்கள் நுழைந்துள்ளீர்கள்.

அட்டவணை A: கடன்தாரர் பெற்ற கடன் வசதிகள் பற்றிய விவரங்கள்

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன் வகை/வரம்பு	அனுமதிக்கப்பட்ட தேதி	அனுமதிக்கப்பட்ட தொகை
1	4054630000004	630 - வீட்டு கடன் - PMAY	21-02-2020	ரூ.27,00,000/-

மேலே கூறப்பட்ட கடன்/கிரெடிட் வசதிகள், இங்குள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அடமானம் வைப்பதன் மூலம், எங்களுக்குச் சாதகமாக உங்களால் செயல்படுத்தப்பட்ட தொடர்புடைய ஆவணங்களின் மூலம் முறையாகப் பாதுகாக்கப்படுகிறது.நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி உங்கள் பொறுப்புகளை நீங்கள் செலுத்தத் தவறியதால், வங்கி **13.06.2024** அன்று உங்கள் கடன்களை NPA ஆக வகைப்படுத்தியுள்ளது. எனவே, சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ், ஈடுபெற்ற கடன் வழங்கியவர் தங்களின் முழுப் பொறுப்பையும் விடுவிக்க இந்த அறிவிப்பின் மூலம் அழைப்பு விடுக்கிறார். அதன்படி, **09.10.2024** அன்று வரையிலான, **ரூ.13,92,734.86** (ரூபாய் பதிமூன்று லட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு மற்றும் எண்பத்தாறு பைசா மட்டும்) மற்றும் பிற செலவுகளுடன் சேர்த்து இந்த அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு உங்களை கேட்டுக்கொள்கிறார், தவறும்பட்சத்தில் சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் உள்ள அனைத்து அல்லது ஏதேனும் உரிமைகளையும் நாங்கள் பயன்படுத்துவோம்.

பிரிவு 13(13)ன் படி, கடன்தாரர்/உத்தரவாததாரர் விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில், இங்குள்ள அட்டவணை Bல் விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களை, ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெறாமல், பரிமாற்றம் செய்யக்கூடாது என்பதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பொருள் சட்டம் மற்றும்/அல்லது நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழ் எங்களுக்குக் கிடைக்கும் வேறு எந்த உரிமைகளுக்கும் பாரபட்சமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஈடுபெற்ற சொத்தை மீட்டெடுக்க, கிடைக்கும் நேரத்தைப் பொறுத்த வரையில், சட்டத்தின் பிரிவு 13ன் துணைப் பிரிவு (8)ன் விதிகளுக்கு உங்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இந்த கோரிக்கை அறிவிப்பு உங்களுக்கு பதிவு அஞ்சல் / கூரியர் மூலம் அனுப்பப்பட்டது.

அட்டவணை B (அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்து)

3900 சதுர அடியில் 1500 சதுர அடி காலி நிலம். பழைய கிராம எண்.97, புதிய கிராம எண்.62, செல்லியம்மன் நகர், தரவூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், புஞ்சை பழைய ச.எண்.9/1, பழைய பட்டா எண்.50, பட்டா எண்.275ன் படி, பட்டா புதிய எஸ்.எண்.9/1AA மற்றும் எல்லைகள் : வடக்கில் திருமதி. ஏ.விஜயலட்சுமிக்கு சொந்தமான மீதி போர்ஷன் மனை எண். எஸ்.எண்.9/1A, தெற்கில் திருமதி.கௌசல்யாவிற்கு சொந்தமான காலி நிலம், கிழக்கில் 20 அடி சாலை, மேற்கில் திரு. மோகனுக்கு சொந்தமான வீடு. விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் 43.5 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் 43.5 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் 34.5 அடி மற்றும் கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் 34.5 அடி, இந்த சொத்தானது ஸ்ரீபெரும்புதூர் சார் பதிவு மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் உள்ளது.

அட்டவணை சி (தேதியில் நேரடி பொறுப்பு விவரங்கள்)

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன் வகை/வரம்பு	25.09.2024 தேதியின்படி வட்டியுடன் கூடிய பொறுப்பு	வட்டி விகிதம்
1	4054630000004	630 - வீட்டு கடன் - PMAY	₹ 13,92,734.86/-	11.25% ஆண்டுக்கு

நாள் : 14-10-2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி.

பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட்
(கலைப்புக்குட்பட்ட) (CIN: U15421TN1995PLC029913)
MCA பதிவின்படி பதிவு அலுவலகம் : 106, பழையசீவரம் கிராமம்,
காஞ்சிபுரம் - 631606, தமிழ்நாடு

திவால்நிலை மற்றும் வங்கிதிவால்நிலை விதி, 2016-ன்கீழ் விற்பனை அறிவிப்பு

மாண்புமிகு NCLT, சென்னை பெஞ்ச், 11.06.2024 தேதியிட்ட உத்தரவின்படி நியமிக்கப்பட்ட கலைப்பலுவலரால் IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் **“உள்ள இடத்தில் உள்ளவாறு”, “உள்ளது உள்ளவாறு மற்றும் எந்தநிலையில் உள்ளதோ அதேநிலையில்”** எனும் அடிப்படையில் பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட் (கலைப்புக்குட்பட்ட) (“கார்ப்பரேட் கடனாளி”) சொத்துக்களை விற்பது தொடர்பான ஏல விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு.

மின் ஏலத்தை பின்வரும் முறையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- **லாட்-1 :** “IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள் 2016-ன் விதிமுறை 32(e) மற்றும் 32A-ன்படி **“நடந்துகொண்டிருக்கும் நிறுவனம் விற்பனை”.**

லாட் 1-ன்கீழ் மின்-ஏலம் தோல்வியடைந்தால்

- **லாட்-2 :** “IBBI (கலைப்பு செயல்முறை) விதிமுறைகள் 2016-ன் விதிமுறை 32(d)-ன்படி **“பகுதியாக சொத்துக்களை விற்பனை செய்வது”.**

ஏலம் விண்ணப்ப படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள்	30.10.2024, புதன்கிழமை
சைட் பார்வையிடும் கடைசி நாள்	16.11.2024, சனிக்கிழமை
EMD சமர்ப்பிக்கும் கடைசி நாள்	18.11.2024, திங்கட்கிழமை
மின்-ஏலம் நாள்	**20.11.2024, புதன்கிழமை**
மின்-ஏலம் நேரம்	லாட் - 1 : 11:00 am to 12:00 noon **லாட் 1-ன்கீழ் மின்-ஏலம் தோல்வியடைந்தால்** லாட் - 2 : 02:00 pm to 03:00 pm

லாட்	விவரம்	ரிசர்வ் தொகை (ரூபாய்)	EMD (ரூபாய்)	ஏலம் உயர்வு தொகை (ரூபாய்)
லாட்-1	கார்ப்பரேட் கடனாளி விற்பனை "நடந்துகொண்டிருக்கும் நிறுவனம்"	165,00,00,000	16,50,00,000	30,00,000
லாட்-2	கார்ப்பரேட் கடனாளியின் சொத்துக்கள் பகுதியாக விற்பனை:	ரிசர்வ் தொகை (ரூபாய்)	EMD (ரூபாய்)	ஏலம் உயர்வு தொகை (ரூபாய்)
	a. **நிலம் மற்றும் கட்டிடங்கள் -** செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலை, எண். 106, பழையசீவரம் கிராமம், வாலாஜாபாத் தாலுகா, காஞ்சிபுரம்-631606-ல் அமைந்த தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம் பரப்பளவு **மொத்த நிலம் 88.83 ஏக்கர்ஸ்**	117,00,00,000	11,70,00,000	20,00,000
	b. **ஆலை மற்றும் இயந்திரங்கள் -** # யூனிட் திறன் 1 சுகர் மில் A 2500 tons per day 2 சுகர் மில் B 6500 tons per day 3 இணை மின் உற்பத்தி நிலையம் 15 MW 4 இணை மின் உற்பத்தி நிலையம் 27.3 MW 5 டிஸ்டில்லரி யூனிட் 100 KLPD (செயல்முறை குறிப்பில் கூடுதல் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன)	48,00,00,000	4,80,00,000	10,00,000

குறிப்புகள்:
1. ஆர்வமுள்ள ஏலதாரர்கள், ஆன்லைன் மின்-ஏலம் செயல்முறையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சொத்துக்கள் மற்றும் சுமைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட செயல்முறை குறிப்பாணையை மின்-ஏலம் நடத்தப்படும் இணையத்தில் பதிவேற்றப்பட்ட அதாவது https://nesl.co.in//auction-notices-under-ibc/ பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். செயல்முறை குறிப்பாணை நகல் பெறுவதற்கு கலைப்பலுவலருக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
2. எந்த நேரத்திலும் மின்-ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்க அல்லது ரத்து செய்ய அல்லது நீட்டிக்க அல்லது மாற்றியமைக்க கலைப்பாளருக்கு உரிமை உள்ளது. எந்த ஒரு ஏலத்தையும் காரணம் கூறாமல் நிராகரிக்க கலைப்பலுவலருக்கு உரிமை உண்டு.
3. மின்-ஏலத்தின் முடிவில், வெற்றிப்பெற்ற ஏலதாரர் ஏலத் தொகையில் 25% (EMD செலுத்தப்பட்ட தொகையை இந்த கட்டணத்தில் சரிசெய்யலாம்) உத்தேச ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்ட 3 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் மற்றும் மீதமுள்ள ஏலத் தொகையின் 75% மற்றும் முழு ஏலத் தொகையின் மீது பொருந்தக்கூடிய வரிகள் ஆகியவை NCLT ஒப்புதல் அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் ஆனால் 90 நாட்கள் மிகாமல், செலுத்த வேண்டும், NCLT ஒப்புதல் அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிறகு செய்யப்படும் தொகை மீது ஆண்டுக்கு 12% வட்டி வசூலிக்கப்படும்.
4. GST மற்றும் பிற பொருந்தக்கூடிய வரிகள் விதிக்கப்படும் மற்றும் ஏலத்தொகைக்கு கூடுதலாக செலுத்த வேண்டும்.
5. மேலும் விளக்கங்களுக்கு, கீழே கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளவும்.

S. ராஜேந்திரன் - கலைப்பலுவலர்
IBBI பதிவு எண். IBBI/IPA-002/IP-N00098/2017-18/10241
ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் செல்லுப்படியாகும் காலம் 22.11.2024
நாள் : 16.10.2024 மின்னஞ்சல்: liq.padmaadevisugars@gmail.com
இடம் : சென்னை தொடர்பு எண். +919840906523, திரு. ரகு K

முகப்பேர் || கிளை
128, வெள்ளாளர் தெரு, VGP நகர்,
முகப்பேர் மேற்கு, சென்னை-600 037
Mob: 94443 96493 Email: cb16112@canarabank.com
Canara Bank கனரா வங்கி A Government of India Undertaking Syndicate சிண்டிகேட்

கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13(2)) கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்

2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு பத்திரிக்கையின் வாயிலாக வெளியிடப்படுகிறது.

பெறுநர்: கடன் கணக்கு எண்கள் 61121400000459, 61129910000286, 61129160000131, 170001938639: கடன்தாரர்: M/s எஸ் எஸ் பேக்கேஜிங், உரிமையாளர்: T யோகராஜ், மனை எண்.80 மற்றும் 81, M K B நகர், திருமுடிவாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600044, **உரிமையாளர்: 2.Mr.T.யோகராஜ்,** S/o.திருமாறன் E, **ஜாமீன்தாரர்: 3.Mr.திருமாறன்.E,** S/o D எத்திராஜன், **இருவரது முகவரி,** மனை எண்.1/225, TNHB, 1வது ப்ளாக், 2வது தெரு, முகப்பேர் மேற்கு, முகப்பேர் SO, சென்னை, தமிழ்நாடு - 600037

கடன் கணக்கு எண் 61127830000072: கடன்தாரர்: Mr.திருமாறன்.E, S/o D எத்திராஜன், **சக-கடன்தாரர்: Mrs.சாந்தி திருமாறன்,** W/o.திருமாறன், **இருவரது முகவரி,** மனை எண்.1/225, TNHB, 1வது ப்ளாக், 2வது தெரு, முகப்பேர் மேற்கு, முகப்பேர் SO, சென்னை, தமிழ்நாடு - 600037

அன்புடையீர்,

பொருள்: 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு.

2002-ஆம் ஆண்டின் பிணைக்காப்பு நிதிச்சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைகாப்பு (செயலாக்க) விதிகள் 2002-ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of security interest Act 2002 and Security interest (Enforcement) rules 2002) (Act 54 of 2002) (இனி சட்டம் என்றே அழைக்கப்படும்) **கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கனரா வங்கி, முகப்பேர் கிளை (16112)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி** கீழ்க்கண்ட அறிவிப்பினை தங்களுக்கு வெளியிடுகிறார்.

